**தம்புள்ளை பிரதேச சபை - 2023**

----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தம்புள்ளை பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தம்புள்ளை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட

மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் மற்றும் நிலுவை வருமானம் ரூபா 17,240,000 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | 2024 இற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சீர் செய்வதாக | கணக்குகள் சீர் செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 ஆம் ஆண்டுடன் தொடர்பான மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட ரூபா. 1,397,000 ஆகிய பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) மீளாய்வாண்டில் மோட்டர் கிரேடரை வாடகைக்கு விடுவதன் மூலம் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 112,500 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட இனாமலுவை கட்டடத்தின் கழிவறைத் தொகுதியை நிர்மாணிக்கும் திட்டத்தின் செலவுகள் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா. 1,005,844 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2011 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட எல்லை நிர்ணயம் காரணமாக உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கைக்கு அமைவாக தம்புள்ளை பிரதேச சபையின் மூலம் தம்புள்ளை மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா. 2,486,917 எனக் காட்டப்பட்டிருந்த போதும் ரூபா. 2,806,009 மாநகர சபை மூலம் பிரதேச சபைக்கு சிடைக்க வேண்டுமென கருதப்பட்டு தவறுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | விடயங்களை ஆராய்ந்து சீர் செய்வதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும் |
| (ஊ) | மீளாய்வாண்டில் 06 சுற்றுலா ஹோட்டல்களின் நிதிக ்கூற்றுக்களின் பிரகாரம் பட்டியல்படுத்தப்பட வேண்டிய வருமானம் ரூபா. 2,570,956 ஆகவிருந்த போதும் அது ரூபா. 699,256 என கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் ரூபா. 1,871,700 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (எ) | மீளாய்வாண்டில் 02 ஹோட்டல்களின் மூலம் அடுத்த ஆண்டுக்காக பெறப்பட்டிருந்த ரூபா. 53,684 வருமானமொன்று மீளாய்வாண்டின் வருமானமெனக் கருதப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டின் திசம்பர் மாதத்தில் மாநகர சபை மூலம் பெறப்பட்ட கழி வாகன சேவைக்காக செலுத்த வேண்டிய ரூபா. 56,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஐ) | மீளாய்வாண்டினுள் வங்கிக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா. 65,437 வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள 5 கணக்குகளின் மீதிகளை அவற்றுடன் தொடர்பான பதிவேடுகள் மற்றும் அட்டவணைகளுடன் ஒப்பீடு செய்யும் பொழுது ரூபா. 37,984,363 இணக்கமின்மை காணப்பட்டது. | அட்டவணைகளில் பிழைகள் காணப்படுவதுடன் அவற்றை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகள் சீர் செய்யப்படல் வேண்டும். |

**1.6.3 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2020 ஆண்டுகளுக்காக பெற வேண்டிய ரூபா. 2,356,580 நிலுவை முத்திரைக் கட்டணத்தினை அறவீடு செய்யாத தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்காது பெறுகைக்கான கால எல்லை கடந்திருந்தமை காரணமாக எனக் குறிப்பிடப்பட்டு முறையான அனுமதியின்றி 63 ஆம் இலக்க நாட்குறிப்பு மூலம் பதிவழிக்க்ப்பட்டிருந்தது. | முறையான அனுமதியுடன் பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முறையான அனுமதி பெறப்பட்ட பின்னர் நிலுவை வருமானங்களை பதவிழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.4 தொங்கல் கணக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொங்கல் களஞ்சியக் கணக்கின் ரூபா. 411,946 ஆகிய வரவு மீதி மீளாய்வாண்டிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இக் கணக்கினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுப்பதாக | மீதிகளை இனங்கண்டு தீர்த்து வைத்தல் வேண்டும். |

1.6.5 **கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா. 13,793,291 ஆகவிருந்த 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா. 58,795,242 ஆகவிருந்த 03 பொறுப்பு மீதிகள் ஆகியவற்றுடன் தொடர்பான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக திருப்திகரமாக முனைப்பழிவு செய்ய முடியாதிருந்தது | கோவைகளை ஆராய்ந்து பார்த்து சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கணக்கு மீதிகளுடன் தொடர்பான பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் ஆகியன தயாரிக்கப்படல் வேண்டும் |

1.7 **இணக்கமின்மைகள்**

1.7.1 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ)இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் (4) | கம்பெக்டரின் பக்க கண்ணாடி உடைந்தமை மற்றும் டிரக்டர் வண்டியொன்றின் வலது பக்க கதவின் கண்ணாடி மற்றும் இடது பக்க கண்ணாடி உடைந்தமை தொடர்பாக ஆரம்பகட்ட பரிசோதனை மற்றும் | பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | முழு அளவிலான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு சேதம் மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) 1992 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 26/92 இலக்க சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 07 வாகனங்களின் உடலில் அரச இலட்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல் வேண்டும் |
| (ii) 2016 திசம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்க சுற்றறிக்கை | 01 வருடத்திற்கும் 07 வருடங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் 06 வாகனங்களின் எரிபொருள் விரயப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படுதல் வேண்டும் |

## 02. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி விளைவுகள்</u>

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 49,949,089ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,101,567 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2023 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 22,265,000 | 5,167,977 | 4,591,342 | 2,161,139 | 29,665,000 | 3,099,407 | 2,996,617 | 1,584,503 |
| (ii) | வாடகை | 18,102,500 | 13,723,014 | 14,478,258 | 680,450 | 23,699,200 | 10,359,585 | 9,280,683 | 1,435,694 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 34,845,248 | 114,722,678 | 138,816,474 | 33,482,920 | 42,263,576 | 27,019,469 | 22,165,669 | 11,509,800 |
| (iv) | ஏனைய வருமானம் | | | | | | | | |
| | | 75,212,748 | 133,613,669 | 157,886,074 | 36,324,509 | 95,627,776 | 40,478,461 | 34,442,969 | 14,529,997 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| (i) மீளாய்வாண்டின் திசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 341,150 ஆகிய வியாபார அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை காணப்பட்டதுடன் அதில் ரூபா. 241,850 முன்னைய ஆண்டுடன் தொடர்புடையதாக இருந்தது. | ஆராய்ந்து பார்த்து நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) தனியார் ஹோட்டல் ஒன்றிலிருந்து கடந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா. 277,512 அறவிடப்பட்டிருக்கவில்லை. | குறித்த தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

(ஆ) <u>வேறு வருமானங்கள்</u>

| | | | |
|---|---|---|---|
| (i) | அட்டவணைப்படுத்தப்பட்ட 246 குழாய்க்கிணறுகளைப் பயன்படுத்துவது தொடர்பில் பௌதிக பரிசோதனை மேற்கொள்ளப்படாது வருடாந்தம் ரூபா. 200 அடிப்படையில் பட்டியல் இடப்பட்டிருந்த போதும் வாடகை அறவிடப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று நிலுவை வருமானம் ரூபா. 870,100 ஆகவிருந்தது. | அறிக்கையொன்றினைத் தயாரித்து பட்டியலிடுவதை நிறுத்தி விட்டு நீக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | விரைவில் செயல்பட்டு முறையான அனுமதியுடன் நீக்குவதற்கு அல்லது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் கழிவுக் கட்டண நிலுவை வருமானம் ரூபா. 860,500 ஆக இருந்ததுடன் இதில் ரூபா. 292,500 கழிவு சேகரிக்கும் சேவையினைப் பெற்றுக்கொடுப்பதை நிறுத்தியிருந்த 08 நிறுவனங்களிடமிருந்து முன்னைய வருடங்களுக்காக பெற வேண்டிய நிலுவை வருமானமாகவிருந்தது. | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை சபையினால் வெளித் தரப்பினருக்கு வாகனத் தரிப்பிடங்களை வாடகைக்கு விடுவதன் மூலம் அறவிடப்பட வேண்டியிருந்த கேள்வி நிலுவை வருமானம் ரூபா. 1,029,121 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | <u>நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்</u> | | |
| | மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டின் திசம்பர் 31 திகதியன்று பெற வேண்டியிருந்த முத்திரைக் கட்டணம் ரூபா. 8,064,300 ஆகவிருந்தது. | அட்டவணைகளை சமர்ப்பித்து கட்டணங்களை அறவிடுவதாக | நிலுவை தொகைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டிற்கான பொருட் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட ரூபா. 461,654 பெறுமதியான பொருட்கள் குறைபாடு தொடர்பாக நி.பி. 104(4) பரிசோதனையை மேற்கொள் வதற்கான குழு நியமிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் குறித்த நட்டத்தினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | புதிய நி.பி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2015 ஏப்ரல் 13 ஆம் திகதி கப் வண்டியொன்று விபத்துக்கு உள்ளாக்கியமை தொடர்பாக 2021 மே 18ஆம் திகதி வெளியிடப்பட்ட நி.பி. 104(4) பரிசோதனை அறிக்கையின் விதந்துரைகளின் பிரகாரம் தவிசாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 2,367,534 தொகையினை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பகுதியளவில் செலுத்துவதற்கு இணங்கியுள்ளதாக | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விசல் தம்புள்ளை நீர் வினியோகத் திட்டத்திற்கான குழாய்கள் பொருத்தும் பொழுது பிரதேச சபை பாதைகளுக்கு ஏற்படும் சேதங்களை திருத்தம் செய்வதற்காக 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி ரூபா. | திட்டம் தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்கும் நிலையில் எதிர்காலத்தில் இது தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை | இதுவரையில் பாதைகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை மதிப்பீடு செய்து அறவிடுவதற்கான |

| | | |
|---|---|---|
| 1,000,000 தொகை வைப்பிலிடப்பட்டிருந்த போதும் குறித்த திருத்த வேலைகள் மேற்கொள்ளப் படாமல் 09 வருட காலமாக வைப்புக் கணக்கில் இருப்பாக வைக்கப்பட்டிருந்தது. | எடுப்பதாக | தொகையை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 <u>செயற்பாட்டு வினைத்திறனின்மை</u>**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் சூழல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 09 நிறுவனங்களின் சூழல் அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாக ரூபா. 85,500 நிலுவையாகக் காணப்பட்டது. | அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 172 நிறுவனங்களிடமிருந்து மீளாய்வாண்டில் சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக வருடாந்தம் ரூபா. 900,000 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | அதிகாரம் வழங்கப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக மாத்திரம் சூழல் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பதாக | அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 2021 யூலை 08 ஆம் திகதிய 2235/54 இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் பிரிவு (2) இன் பிரகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள 24 அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களின் ஒரு வருட செல்லுபடியாகும் காலம் | அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை நீடித்துக்கொள்ளுமாறு அல்லது இணக்கச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுமாறு குறித்த தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக | அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை நீடித்துக்கொள்வதற்கு அல்லது நிர்மாண வேலைகள் பூர்த்தியாகி இருப்பின் இணக்கச் சான்றிதழை |

| | | |
|---|---|---|
| நிறைவடைந்திருந்த போதும் நிர்மாண வேலைகள் முடிவுறாத நிலையில் அவ்வனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலத்தினை நீடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.4 சர்ச்சசைக்குரிய தன்மையிலான் கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடமை நேரத்தின் பின்னர் திட்டமிடல் குழுக் கூட்டத்தினை நடாத்தி அதனுடன் தொடர்பான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதும் கடமை நேரத்தின் போது திட்டமிடல் குழுக் கூட்டத்தினை நடாத்தி 05 உத்தியோகத்தர்களுக்கு 15 சந்தர்ப்பங்களில் ரூபா. 82,500 கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் கோவைகளை குறித்த உத்தியோகத்தர்கள் அதற்கு முன்பதாக ஆராய்ந்துள்ளமையின ால் கடமை நேரத்தின் பின்னர் குழுக் கூட்டம் நடாத்தப்படுவதாக | விரல் அடையாள இயந்திரத்தின் மூலம் வரவு மற்றும் வெளியேறல் உறுதிப்படுத்தப்படா மையினால் குறித்த தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையிடம் டிரக்டர் வண்டிகள் காணப்படும் பின்னணியில் ஜனக மினிபுர பாதைக்களுக்கு தார் இடுவதற்காக மீளாய்வாண்டின் ஜனவரி 17ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றிடமிருந்து டிரக்டர் வண்டியொன்று பெறப்பட்டு ரூபா. 37,500 செலுத்தப்பட்டிருந்தது. | டிரக்டர் வண்டிக்கான சாரதியொருவர் இல்லாததன் காரணமாக வெளி நிறுவனம் ஒன்றிலிருந்து டிரக்டர் வண்டி பெறப்பட்டதாக | நிறுவனத்தின் வளங்கள் பூரணமாக பயன்படுத்தப்பட வேண்டியதுடன் செலவுகளை குறைத்துக்கொள்வத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை பயன்படுத்துகின்ற மயானங்கள் 72, சனசமூக நிலையங்கள் அமைந்துள்ள காணிகள் 69, விளையாட்டு மைதானங்கள் 21, | கையேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | சொத்துக்களை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் |

| | | |
|---|---|---|
| அலுவலகக் கட்டடத் தொகுதி அமைந்துள்ள காணி மற்றும் ஒரு கப் வண்டி ஆகியவற்றின் உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

## 3.6 <u>விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| <u>விளைவற்ற அல்லது குறை பயன்பாடுடைய சொத்துக்கள்</u><br>மீளாய்வாண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட ரூபா. 8,560,318 ஆகவிருந்த 05 சொத்து அலகுகள் மற்றும் பெறுமதி மதிப்பிடப்படாத ஒரு டிரக்டர் வண்டி ஆகியன 01 முதல் 16 வருட காலமாக பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாடு கொண்ட நிலையில் காணப்பட்டன. | சொத்துக்களை பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதாகவும் வாகனங்களுக்கான சாரதிகள் இல்லாததன் காரணமாக பயன்பாட்டில் பிரச்சினைகள் காணப்படுவதாக | சொத்துக்களை திருத்தம் செய்து பயன்படுத்துவதுடன் திருத்தம் செய்ய முடியாத சொத்துக்களை கழிவு நீக்கம் செய்தல் வேண்டும். |

## 3.7 <u>மனித வள முகாமைத்துவம்</u>

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அனுமதிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை உண்மையான பதவியணியினர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் பொழுது 11 பதவிகளுக்கான 24 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களும் சுகாதார சிற்றூழியர் பதவியுடன் தொடர்பான சிற்றூழியர்கள் இருவருக்கான மேலதிகமும் | இடமாற்றம் பெற்று வர வேண்டிய உத்தியோகத்தர்கள் வராததன் காரணமாக உத்தியோகத்தர் குறைபாடு ஏற்பட்டுள்ளதாக | குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. | | |
| (ஆ) | பிரதேச சபையின் சுகாதார, வீதித் தொழிலாளர், குழாய்க் கிணறு தொழில்நுட்பவியலாளர், பம்பு செயற்படுத்துனர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளில் கடமை புரியும் 09 ஊழியர்கள் தமது நிலையான பதவிகளுடன் தொடர்பில்லாத அலுவலக உதவியாளர், நூலக உதவியாளர், சாரதி மற்றும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் | பதவிகள் தொடர்பில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக வேறு சேவைகளுடன் தொடர்பான உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கான நிலை உருவாகி உள்ளதாக | பதவிகளுடன் தொடர்பான கடமைகளில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 4. <u>கணக்களி தன்மையும் நல்லாளுகையும்</u>

### 4.1 <u>நிலையான அபிவிருத்தி இலக்குகள்</u>

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ---------------------------------------------- | ------------------------------- | ------------------------- |
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலையான அபிவிருத்திச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பிரதேச சபையானது நிலையான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டு செயறபடுத்தியிருக்க வில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |